DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : STC.No. 741/2022 | Deposition of Witness for : PW1 |
| Name : லோகநாதன் வினோத் | Father/Husband Name : கனகராஜ் |
| Age : 36 | Village : மதுரை |
| Taluk : மதுரை | Calling : தொழில் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20 August 2025
Accused absent. Petiton U/s.317 Cr.P.C filed and allowed.

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது மதுரையில் குடியிருந்து தொழில் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும், எனது ஊரைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். நான் கடந்த 18.09.2017 அன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழிற்கு தசரா விழா சம்பந்தமாக ஒரு பேட்டி கொடுத்திருந்தேன். அதைத் தொடர்ந்து எனக்கு முகநூல் பக்கத்தில் நிறைய மிரட்டல்கள் வந்தது. இது சம்பந்தமாக நான் 25.09.2017 தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்தேன்.

2. பின்பு 28.09.2017 ம் தேதி காலை 7.00 மணியளவில் தசரா திருவிழாவிற்காக எனது சொந்த ஊரான அழகப்பபுரத்திற்கு வந்திருந்தேன். காலை 10.00 மணியளவில் நான், எனது சித்தப்பா மகன் தீபன் மற்றும் எனது மச்சான் ஆதிமுருகன் ஆகியோர் வீட்டின் முன்பு நின்றிருந்தோம். அப்போது அங்கு சிவகுமார், ஆனந்தராஜா, பாலமுருகன் மற்றும் குரு ஆகியோர்கள் வந்தார்கள். எதிரிகள் என்னை தேவடியா மவனே என்று ஆபாசமாக பேசி, தசராவிற்கு எதிராக பேட்டி கொடுத்துவிட்டு, தற்போது தசராவை கொண்டாட ஏன் ஊருக்கு வந்தாய் என்று கேட்டார்கள், எதிரி பாலமுருகன் அவரது வலது காலால் எனது தம்பியின் வலது மார்பில் எட்டி உதைத்தார். மற்ற எதிரிகள் என்னையும், எனது தம்பியையும் கையால் மாறி, மாறி உடம்பில் அடித்தார்கள். சம்பவத்தை பார்த்து அங்கிருந்த வெற்றிவேல், ஐக்கோர்ட் மற்றும் ஆதிமுருகன் ஆகியோர்கள் சத்தம் போட்டு விளக்கி விட்டார்கள். எதிரிகள் போகும்போது என்னைப் பார்த்து இந்த தடவை நீ தப்பித்து விட்டாய், இனி நீ வந்தால் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று கூறி கொலை மிரட்டல் விடுத்து சென்றார்கள்.

3. காயம்பட்ட எனது தம்பியை திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். எனக்கு வெளிக்காயங்கள் ஏதும் இல்லாததால் நான் சிகிச்சையில் சேரவில்லை. எதிரிகள் என்னை ஆபாசமாக பேசியதால் எனக்கு மனஉளைச்சல் ஏற்பட்டது, மேலும் எதிரிகள் எனக்கு கொலை மிரட்டல் விடுத்ததால் எனக்கு உயிர்பயம் ஏற்பட்டது. இது சம்பந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

4. என் ஊருக்கு அருகில் படுக்கப்பத்து என்ற ஊர் இருக்கிறது, அந்த ஊரில் அரசு மருத்துவமனை இருக்கிறது என்றால் எனக்கு தெரியாது. என் ஊரில் இருந்து திருச்செந்தூர் செல்ல வேண்டுமானால் உடன்குடி தாண்டிதான் சென்றிருப்பீர்கள்

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2025.08.20 15:52:07 +0530

என்றால் குலசேகரப்பட்டணம் வழியாக தான் வழக்கமாக செல்வோம். குலசேகரப்பட்டணத்தில் அரசு மருத்துவமனை உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. குலசேகரப்பட்டணத்தில் நடக்கும் தசரா விழா பண்டிகையில் நடக்கும் ஆடல், பாடல் விழாவில் ஆபாசமான காட்சிகள் இருப்பதால் அதை தடை செய்ய வேண்டும் என்று நான் பேட்டி கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த பேட்டி சம்பந்தமாகதான் பிரச்சனை ஏற்பட்டது, அதை மக்கள் தவறாக புரிந்து கொண்டார்கள்.

5. குலசேகரப்பட்டணம் ஊரில் அரசு மருத்துவமனை உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்று சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 புகார் மனுவை யார் எழுதினார்கள் என்றால் நான்தான் எழுதினேன். அதில் யார், யார் என்னை முகநூல் பக்கத்தில் மிரட்டினார்கள் என்ற விபரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பொதுவாக முகநூல் போன்ற சமூக வலைதளங்களில் மிரட்டுவது சம்பந்தமாக சைபர் கிரைம் மற்றும் காவல்துறையினரிடம் நேரடியாக புகார் கொடுக்கலாம் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் நான் புகார் காவல்துறையினரிடம் கொடுத்தேன், சைபர் கிரைமில் புகார் கொடுக்க வேண்டுமா என்ற விபரம் எனக்கு தெரியாது.

6. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் என்னை புகார் கொடுக்க ஆலோசனை வழங்கிய நபர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு பின்னால் தான் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் உள்ளது அங்கும் புகார் கொடுக்கலாம் என்ற விபரத்தை கூறினார்களா என்றால் இல்லை. நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் புகார் கொடுத்துள்ளதாக வழக்கிற்காக பொய்யாக புகார் அளித்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் 4 பேரின் பெயரையும் எழுதிக் கொடுத்து என்னுடைய புகாரில் நான் தெளிவாக எழுதியுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகார் மனுவில் செல்வராஜ் மகன் என எழுதி அது அடிக்கப்பட்டுள்ளதா என்றால் எதிரி பாலமுருகன் என்பவரின் அப்பா பெயரை தவறுதலாக எழுதியுள்ளதால் அவ்வாறு அடித்து மாற்றினேன்.

7. இந்த வழக்கு எதிரிகள் தான் அழகப்பபுரம் ஊரில் தசரா குழு அமைத்து நடத்தி வந்தார்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. என் அப்பா கனகராஜ் எங்கள் ஊரில் மதிக்க கூடிய நபர் என்றால் ஆம், அவர் கோவில் திருவிழா உட்பட ஊர் நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்த கூடிய நபர் என்றால் சரிதான். நான் அளித்த பேட்டியினால் ஊர் மக்களிடத்தில் என் மீதும், என் அப்பா மீதும் அதிருப்தி ஏற்பட்டு என் அப்பாவை ஊர் நிகழ்ச்சிகளுக்கு அழைக்க கூடாது என்று முடிவு எடுத்ததாக நான் கேள்விப்பட்டு, 28.09.2017 அன்று காலை 11.00 மணிக்கு இந்த வழக்கின் எதிரி பாலமுருகன், அவருடைய நண்பர் காளிராஜ் மகன் பிரவீன் ஆகியோர் அம்மன் கோவில் தசரா பிரைக்கு சாமி கும்பிட வந்தார்கள், அப்போது என் அப்பாவை ஊர் தலைவர் பதவியில் இருந்து நீக்க போவதாக கூறிய சங்கதிகள் கேள்விப்பட்டு என் அப்பா மற்றும் நான், எனது தம்பி விக்னேஷ், இவ்வழக்கு சாட்சி ஆதிமுருகன் ஆகியோர் சேர்ந்து இவ்வழக்கு எதிரி பாலமுருகனை தாக்கியதாக தட்டார்மடம் காவல்நிலையத்தில் வழக்கு பதிவு (குற்ற எண்.116/2017) செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் என் அப்பாவை ஊர் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்போவதை நான் கேள்விப்படவில்லை, அவ்வாறு தட்டார்மடம் காவல்நிலையத்தில் குற்ற எண்.116/2017 நிலுவையில் உள்ளது எனக்கு தெரியும்.

8. இந்த வழக்கில் என்னை விசாரணை செய்த காவல் அதிகாரியின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் யாரிடம் புகார் அளித்தேன் என்றால் ஜான்சன் என்ற காவல் அதிகாரியிடம் புகார் கொடுத்தேன் அவர் தான் இந்த வழக்கு சம்பவம் சம்பந்தமாக என்னை விசாரித்தார். வேறு ஏதேனும் காவல் அதிகாரிகள் என்னை விசாரித்தார்களா என்றால் (சாட்சி முதலில் இல்லை என்று கூறிவிட்டு பின்னர் 3 காவல்

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2025.08.20 15:52:14 +0530

அதிகாரிகள் தன்னை விசாரித்ததாக கூறுகிறார்).

9. பொதுவாக எங்கள் ஊரில் இருந்து திருச்செந்துார் செல்வதற்கு அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச நேரம் எவ்வளவு என்றால் 1 மணி நேரத்தில் இருந்து 1 1/4 மணி நேரம் வரை ஆகும், அன்றைய போக்குவரத்து நெரிசலை பொறுத்து, வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நாள் குலசேகரப்பட்டணம் கோவிலில் 7 ம் திருநாள் என்பதாலும், அன்றைய தினம் அதிகப்படியான கூட்டம் இருந்திருக்கும் நான் கடந்து செல்ல எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்ளப்பட்டது என்றால் சுமார் 1 மணி நேரம் எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடத்தில் இருந்து எவ்வளவு நேரத்தில் கிளம்பினீர்கள் என்றால் 10 மணிக்கு சம்பவம் நடைபெற்றது, நான் 10.15 மணியளவில் கிளம்பினேன்.

10. நான் முதல் விசாரணையில் சொல்லியதையும், தற்போது குறுக்கு விசாரணையில் சொல்லிக் கொண்டிருக்கும் விசாரணையிலும், இந்த வழக்கின் வேறு சாட்சிகள் இந்த வழக்கின் விசாரணை அதிகாரியிடம் விரோதமாக யாரேனும் வாக்குமூலம் கொடுத்திருந்தால் அது உண்மையா, பொய்யா என்றால் அவர்கள் என்ன கூறியிருப்பார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் இதை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

11. இந்த வழக்கில் மொத்தம் எத்தனை எதிரிகள் என குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அது எவ்வாறு கூட்டி, குறைக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எங்கள் மீது போடப்பட்ட வழக்கு என்ன நிலையில் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பொய் வழக்கு, தற்போது நிலுவையில் உள்ளது என்று சொன்னார்கள். என்னுடைய பண பலத்தாலும், அதிகார பலத்தாலும் அந்த வழக்கு பொய் வழக்கு என்று முடித்துவைக்கப்பட்டு, எனக்கு வேண்டிய நபர்களை விட்டுவிட்டு, எனக்கு வேண்டாத நபர்களை காவல்துறையினரிடம் கூறி வழக்கில் சேர்க்க சொல்லி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு அதில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, அதனால் தான் இந்த வழக்கு சம்பவத்தை குறித்து முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12. என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடம் சம்பவ இடம் குறித்து போலீசாரால் போடப்பட்ட படம் என்பது எனக்கு தெரியுமா என்றால் இது மாதிரி வரைபடம் தான் இது போலீசாரால் போடப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. மாதிரி வரைபடத்தில் சம்பவ இடமாக காவல்துறையினர் கட்டேரி அம்மன் கோவில் முன்பாக சம்பவம் நடைபெற்றதாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான்.

13. என் தம்பிக்கு எத்தனை நாட்கள் சிகிச்சை அளிக்கப்பட்டது மற்றும் அவர் எத்தனை நாட்கள் மருத்துவமனையில் இருந்த விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவர் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றாரா அல்லது வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றாரா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சிகிச்சை பெற்ற விபரம் ஏன் தெரியாது என்றால் நான் அவருடன் மருத்துவனைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல, நான் அவருடன் மருத்துவமனைக்கு சென்றேன்.

14. 1 வது எதிரி பாலமுருகனை நான் அடித்ததால் அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக அவர் சாத்தான்குளம் அரசு மரத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்ற விபரத்தை தெரிந்த கொண்ட நான் எவ்வித காயமும் ஏற்படாத என் சித்தப்பா மகன் தீபனுக்கு காயம் ஏற்பட்டதாக கூறி ப.சா.5 ஆதிமுருகன் என்பருடன் திருச்செந்துார் அரசு மருத்தவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டு, எதிரி மீது பெய்யான புகார் அளிக்க தட்டார்மடம் காவல்நிலையத்திற்கு வந்தேன் என்றால் சரியல்ல. நான் தட்டார்மடம் காவல் நிலையத்திற்கு வந்த நேரம் தோராயமாக ஞாபகம் இருக்கிறதா என்றால் ஞாபகம்

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2025.08.20 15:52:19 +0530

இருக்கிறது, மாலை 5.30 மணி ஆகும். அதன் பின்னிட்டு தான் புகார் எழுதப்பட்டதா என்றால் நான் காவல்நிலையத்திற்கு வரும்போத புகார் எழுதி தான் கொண்டு வந்தேன். அந்த அ.சா.ஆ.1 புகார் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் காரில் வைத்து எழுதப்பட்டது. நான் இதை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், காவல்துறையினரால் காவல்நிலையத்தில் வைத்து எவ்வாறு புகார் எழுதப்பட வேண்டும் என்று சொல்லிக் கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் எழுதிய பொய் புகார் என்றால் சரியல்ல.

15. நாங்கள் எத்தனை வகையான தொழில் செய்து வருகிறோம் என்றால் ஒரே ஒரு தொழில் மட்டும் செய்து வருகிறோம், அது Plastic packaging industry ஆகும். ப.சா.3 சுகன்ராஜ் எனக்கு என்ன உறவு முறை என்றால் அவர் என் உறவினர் இல்லை. ப.சா.4 கதிரேசன் ஊர் காரர், ப.சா.5. ஆதிமுருகன் உறவினர் ஆவார் என் மச்சான் உறவு முறை, ப.சா.6. ஐக்கோர்ட் , ப.சா.7. வெற்றிவேல், ப.சா.8. தனபால், ப.சா.9 நடராஜன் ஆகியோர் என் உள்ளூர் காரர்கள் என்றால் சரிதான் மற்றும் அவர்கள் வேண்டிய நபர்கள் என்றால் இல்லை.

16. எதிரிகள் எந்த குற்ற செயல்களிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் எதிரிகளை தாக்கிவிட்டு, அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக காவல்துறை உதவியோடு சோடிக்கப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி எனக்கு எந்த விதமான காயமும் மற்றும் என்னை யாரும் தாக்கவும் இல்லை அதனால்தான் நான் சிகிச்சைக்கு சேரவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.08.20 15:52:26 +0530

Judicial Magistrate, Sathankulam.